# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு

# வெற்றிடங்கள், செயற்றிட்ட ஊழியர் குழாம்

புகையிரத செயற்பாடுகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தில் (REIP) காணப்படும் கீழ்க்காணும் வெற்றிடங்கள் சார்பாக செயற்றிட்ட ஊழியர் குழாமை சேர்த்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல. 01/2019 இன் பிரகாரம் போக்குவரத்து அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனின் கீழ் அமைச்சு மற்றும் இலங்கை புகையிரத சேவையுடன் இணைந்து செயற்படுத்தப்படும்.

அதன் பிரகாரம் மேற்படி செயற்றிட்டத்திற்குள் காணப்படும் கீழ்க்காணும் வெற்றிட பதவிகளை நிரப்புவதற்காக ஆங்கில மொழி பற்றிய தேர்ச்சி, அரச நிதி விதிமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் வெளிநாட்டு உதவி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் ஆட்களை மீண்டும் பதிவு செய்யும் செயற்பாடுகள் பற்றிய அனுபவம் போன்ற முன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய தகைமையுடனான இலங்கை பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | வெற்றிட பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிரேஷ்ட சமூக பாதுகாப்பு அதிகாரி | 01 |

சிரேஷ்ட சமூக பாதுகாப்பு அதிகாரி (PS - 05) வெற்றிட எண்ணிக்கை 01 குறித்த பிரிவினால் மேற்கொள்ளப்படும் சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல், மதிப்பீட்டு விடயங்களை பார்வையிடல் மற்றும் குறித்த பிரிவினால் மேற்கொள்ளப்படும் சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு நேரடியாக சமுகமளித்தல், மீள்பதிவு செய்யும் வேலைகளை செயற்படுத்துதல், மற்றும் காணி சுவீகரித்தல் போன்ற செயற்றிட்டத்தின் சகல கட்டங்களுடனும் சம்பந்தப்பட்டதாக தோன்றுகின்ற சகல சமூக சுற்றாடல் சிக்கல்களை இணங்காணல், பிரதி செயற்றிட்ட பணிப்பாளர் (சமூக பாதுகாப்பு) உதவி செயற்றிட்டப் பணிப்பாளர் (சமூக பாதுகாப்பு) இனால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை தீர்மானங்களுக்கு அமைவாக அதன் சிக்கல்களைத் தீரத்தல் சம்பந்தமாக சிரேஷ்ட சமூக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

**தேவைப்படும் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் குறித்த துறையில் பட்டம்

அல்லது

குறித்த துறையில் பட்டத்திற்கு சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகைமை

அல்லது

குறித்த துறைக்கு உரித்தான தொழில்சார் நிறுவனத்தில் அங்கத்தவராக இருத்தல்/ அவ்வாறான நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட சமமான தொழில்சார் தகைமை

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழில்சார் பயிற்சி நிறுவனத்திலிருந்து தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 7 மட்டத்தில் சான்றிதழைப் பெற்றிருத்தல்

மற்றும் தரப்பட்டுள்ள துறையுடன் சம்பந்தப்பட்ட குறைந்தபட்சம் 05 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு**

PS - 05 மட்டத்தில் - ரூ. 105,000.00 - 113,000.00 (மாதாந்த சம்பளம்)

**பொது நிபந்தனைகள் :**

1. வயதெல்லை : சகல விண்ணப்பதாரிகளும் 64 வயதிற்குக் குறையாதவர்களாக இருத்தல் வேண்டும். (வயது 64 வயதிற்குக் கூடியவர்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது)
2. ஊழியர் சேமலாப நிதிக்கான பங்களிப்பு (ஊழியர்களிடம் இருந்து 8% மற்றும் சேவை தருநரிடமிருந்து 12%)
3. சேவையில் ஈடுபடுதல் பற்றிய நிபந்தனைகள்:

ஆரம்பத்தில் இந் நியமனம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடம் (01) இற்கு ஆவதுடன், திருப்திகரமான செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்ட கால எல்லையினை அடிப்படையாகக் கொண்டு சேவைக்காலம் நீடிக்கப்படும் வாய்ப்பு உண்டு.

**விண்ணப்பங்கள் :**

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் புகையிரத சேவைத் துறையுடன் சம்பந்தப்பட்ட அனுபவம் பற்றிய விபரங்கள் மற்றும் உறவினரல்லாத பரிந்துரைப்பவர்கள் இருவரின் விபரத்தைக் குறிப்பிடும் விண்ணப்பங்களை 01.08.2024ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு செயற்றிட்டப் பணிப்பாளர், புகையிரத செயற்பாடுகளை மேம்படுத்தும் செயற்றிட்டம், இல. 217 கொட்டா வீதி, கொழும்பு - 08, என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

அரச சேவையில்/ அரச சார்பு சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை குறித்த திணைக்கள தலைமையூடாக அனுப்ப வேண்டியதுடன், விண்ணப்பங்கள் சரியான நேரத்தில் கிடைக்கப்பெற்றதை உறுதி செய்வதற்காக நேரடி பிரதியொன்றை அனுப்புமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

**செயலாளர்,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ம் மாடி, 2ம் கட்டம்,**
**செத்சிரிபாய, பத்தரமுல்லை.**
**2024.07.17**